# <u>சிதம்பரம் நகராட்சி</u>



**2023-ம் ஆண்டு ஆனி திங்கள் 29-ம் நாள் 14.07.2023 வெள்ளி கிழமை மாலை 04.00 மணியளவில் நடைபெறும் சாதாரண நகர்மன்ற கூட்டம்**

**மன்றகூட்டப்பொருள்**

**1)** நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) அவர்களின் மே-2023 மாத நாட்குறிப்பு பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்.380, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2)** **2022–2023**ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.381, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**3)** சிதம்பரம் நகராட்சி உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகள் நிதி (I&A) 2022-23-ன்கீழ் மதிப்பீடு ரூ.1500.00 இலட்சத்திற்கு புதிய பேருந்து நிலையம் கட்டும் பணிக்கு 12.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s. CHENNUR INFRASTRUCTURE PVT, CHENNAI நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்.382, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

4) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 13.06.2023 அன்று வருவாய் நிதி (Revenue Fund) 2022-23 -ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம்** | **மதிப்பீட்டு தொகை ரூ** | **ஒப்பந்த சதவீதம்** |
|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** |
| | **வருவாய் நிதி (Revenue Fund) 2022-23** | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சி தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர் மாணவியருக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் ஓராண்டு காலத்திற்கு காலை உணவு வழங்குதல் | மெஸ்ஸர்ஸ். ஸ்ரீ அங்கு மீனாட்சி பவன், கீழரதவீதி சிதம்பரம். | 12.70/ (ஒரு மாணவருக்கு) | மதிப்பீட்டு விலையை விட (-) 0.79 % குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி (-) 0.79 % மதிப்பீட்டு விலையைவிட (ரூ.12.60/ஒரு மாணவருக்கு) குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள

மெஸ்ஸர்ஸ். ஸ்ரீ அங்கு மீனாட்சி பவன், கீழரதவீதி சிதம்பரம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.383, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

5) இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 17.05.2023 அன்று வருவாய் நிதி (Revenue Fund) 2022-23 -ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வஎண் | பணியின்பெயர் | ஒப்பந்ததாரர் நிறுவனத்தாரின் பெயர்மற்றும்விபரம் | மதிப்பீட்டு தொகைரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி (Revenue Fund) 2022-23** | | | | |
| | சிதம்பரம் நகராட்சி பொதுபிரிவு பொதுசுகாதாரபிரிவு மற்றும் பொறியியல் பிரிவிற்கு தேவையான கணினி மடிக்கணினி மற்றும் பிரிண்டர்கள் வாங்கி வழங்கும் பணி | மெஸ்ஸர்ஸ் கேகே இன்ஃபோடெக் எஸ்பி கோவில் தெரு சிதம்பரம் | 18,50,000/- | மதிப்பீட்டு விலையை விட(-) 0.01 %குறைவு | |
| | | மெஸ்ஸர்ஸ் பாலன் எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்எண் வெல்லபிறந்தான் தெருசிதம்பரம் | | | மதிப்பீட்டு விலையை விட(-) 0.76 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி (-) 0.01 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெஸ்ஸர்ஸ். மெஸ்ஸர்ஸ். கே.கே. இன்ஃபோடெக், எஸ்.பி. கோவில் தெரு, சிதம்பரம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.384, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6)** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் பணியினை செய்ய 25.05.2023 அன்று வருவாய் நிதி (Revenue Fund) 2022-23 -ன்கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் மீது கீழ்கண்ட விபரப்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

| வ.எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர்/ நிறுவனத்தாரின் பெயர் மற்றும் விபரம் | மதிப்பீட்டு தொகை ரூ | ஒப்பந்த சதவீதம் குறைவு | ஒப்பந்த சதவீதம் அதிகம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **வருவாய் நிதி (Revenue Fund) 2022-23** | | | | |
| 1 | சிதம்பரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் உள்ள மின் பவர் பம்பு மற்றும் கைபம்புகளில் உள்ள Plotform கான்கீரிட் சரிசெய்யும் பணி மற்றும் குடிநீர் பகிர்மான குழாய்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை சரிசெய்த பின்பு சாலைகளை கான்கீரிட் கொண்டு சரிசெய்யும் பணி | திருமதி ஆர்கோமதி, ஒப்பந்ததாரர், சம்பந்தகார தெரு, சிதம்பரம். | 3,00,000/- | மதிப்பீட்டு விலையை விட (-) 0.11 % குறைவு | |
| | | திருமதி கே முத்துலட்சுமி, ஒப்பந்ததாரர், பணங்காடு, சிதம்பரம். | | | மதிப்பீட்டு விலையை விட (-) 0.10 % அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் எண். 5, கண்டுள்ளபடி (-) 0.11 % மதிப்பீட்டு விலையைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமதி ஆர்.கோமதி, ஒப்பந்ததாரர், சம்பந்தகார தெரு, சிதம்பரம். என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்.385, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**7)** சிதம்பரம் நகராட்சி உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக வாக்குப்பெட்டிகள் மின்னனு வாக்கு இயந்திரங்கள் மற்றும் வாக்கு பதிவிற்கு தேவையான இதரப்பொருட்கள் விருத்தாசலம் அரசு சேமிப்பு கிடங்கில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதால், அரசு சேமிப்பு கிடங்கிற்கான மாத வாடகை ஜனவரி 2022 முதல் டிசம்பர் 2022 வரையிலான 12 மாதங்களுக்கு வாடகை தொகை ரூ.21846/– தொகை செலுத்த கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.பஇ2/3304/2023 நாள்.15.05.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வாடகை தொகை செலுத்த மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3088/2021/சி1)**

**தீர்மானம் எண்.386, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

8) கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட நகராட்சி நிர்வாகத்துறை வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து 27.04.2023 அன்று நடைபெறும் ஆய்வுக்கூட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், நகர்புற வளர்ச்சி துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வருகையினை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி **2022–23–ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

| வ. எண். | நாளிதழ் விபரம் | விளம்பர நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினதந்தி | 45911 | 45911 |
| | | **கூடுதல்** | 45911 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.387, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

9) கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட நகராட்சி நிர்வாகத்துறை வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து 27.04.2023 அன்று நடைபெறும் ஆய்வுக்கூட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், நகர்புற வளர்ச்சி துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வருகையினை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022—23—ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | தினகரன் | 34650 | 34650 |
| | | **கூடுதல்** | 34650 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.388, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

10) சிதம்பரம் நகராட்சிக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு மற்றும் ஓராண்டு சாதனை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022—23—ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | தினதந்தி | 22260 | 22260 |
| | | **கூடுதல்** | 22260 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.389, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

11) கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட நகராட்சி நிர்வாகத்துறை வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து 27.04.2023 அன்று நடைபெறும் ஆய்வுக்கூட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர், நகர்புற வளர்ச்சி துறை மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் வருகையினை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு,
வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022—23—ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | தினமலர் | 51975 | 51975 |
| | | **கூடுதல்** | 51975 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.390, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

12) சிதம்பரம் நகராட்சி புதிய பேருந்து நிலையம் கட்டும் பணி மேற்கொள்வதற்கு கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி 2022—23—ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | VIPRAS Adz | 99540 | 99540 |
| | | **கூடுதல்** | 99540 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.391, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

13) சிதம்பரம் பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் பணியாளர்கள் மற்றும் வாகனங்களை அமர்த்தி பணி மேற்கொள்வதற்கு செயல்படுத்த கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி **2022–23–**ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | VIPRAS Adz | 42263 | 42263 |
| | | **கூடுதல்** | 42263 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.392, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

14) சிதம்பரம் நகராட்சிக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு மற்றும் ஓராண்டு சாதனை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி **2022–23–**ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | தினமலர் | 01.03.2023 | 19844 |
| | | **கூடுதல்** | 19844 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.393, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

15) சிதம்பரம் நகராட்சி வார்டு எண்.4-ல் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் ரூ. 139.00 இலட்சத்தில் பெரியண்ணா குளம் தூர்வாரி மேம்பாடு செய்யும் பணி மற்றும் ரூ. 58.00 இலட்சத்தில் நடராஜா கார்டன் பூங்கா அமைக்கும் பணியினை திறந்த வைக்க வருகை தரும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு MRK பன்னீர்செல்வம் அவர்களை வரவேற்று கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி **2022–23–**ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | தினகரன் | 40000 | 40000 |
| | | **கூடுதல்** | 40000 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.394, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

16) சிதம்பரம் நகர மக்களின் குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் கொள்ளிடம் ஆற்றினை நீராதரமாக கொண்டு கொள்ளிடம் கூட்டுகுடிநீர் திட்டத்தை செயல்படுத்த ரூ.**255.64** கோடி ஒதுக்கி அரசாணை கீழ்காணும் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு, வரப்பெற்ற பட்டியல் தொகையை வருவாய் நிதி **2022–23–**ன்கீழ், வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **நாளிதழ் விபரம்** | **விளம்பர நாள்** | **தொகை** |
|---|---|---|---|
| 1 | இந்து தமிழ் திசை | 26.12.2022 | 27195 |
| | | **கூடுதல்** | 27195 |

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.395, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

17) இந்நகராட்சி பழைய புதைவடிகால் திட்ட கழிவு நீர் சேகரிப்பு குழாய் மற்றும் ஆய்வுக்குழிகளில் பழுதடைந்த நிலையில் உள்ள AIRVENT குழாய்களை பொது ஏலம் மூலம் கழிவு செய்ய நகர்மன்ற தீர்மான எண்.372 நாள். 17.5.2023-ன்படி நிர்வாக அனுமதி பெற்று 16.6.2023 அன்று பொது ஏலம் நடைபெற்றதில் கீழ்காணும் விவரப்படி ஏலத்தொகை அளித்துள்ளார்கள்.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர் பெயர் | ஏலத்தொகை ரூ. |
|---|---|---|
| 1 | S.சோமசுந்தரம் 12,நெல்லுகடை தெரு, சிதம்பரம். | ரூ.41388/- |
| 2 | சுல்தான் சையது இப்ராஹீம் 1முதல் கிராஸ் தெரு, சிவசக்தி தெரு,சிதம்பரம். | ரூ.39883/- |
| 3 | R. ராம்குமார் வடக்கு மெயின்ரோடு, அம்பேத்கர் தெரு, சிதம்பரம். | ரூ.40635/- |

மேற்காணும் விவரப்படி இந்த பொது ஏலத்தில் மூன்று நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டதில் திரு.S. சோமசுந்தரம் அவர்கள் அளித்த ஏலத்தொகை ரூ.41388/- உயர்ந்தபட்ச ஏலத்தொகையாகும். மதிப்பீடு தொகையினை விட உயர்ந்தபட்ச ஏலத்தொகை அளித்துள்ளதை ஏற்று பொருட்களை கழிவு செய்யவும். மேலும், முன்பணமாக திரு S.சோமசுந்தரம் அவர்கள் இரசீது எண்.092/001/1/23-24/000279 ன்படி ரூ.3800/- செலுத்தியது போக மீதம் தொகை ரூ.37588/-ம் உடன் GST 18% கட்டணம் ரூ.7450/- ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்திடவும் உயர்ந்தபட்ச ஏலத்தொகை செலுத்தியுள்ள திரு.S.சோமசுந்தரம் அவர்களின் ஏலத்தினை உறுதிசெய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.699/2021/இ1

அ.கு
1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பணியின் அவரசம்கருதி நகர்மன்ற தலைவர் முன்அனுமதிபெற்று உபயோகம் மற்ற பொருட்களை கழிவு செய்ய உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.396, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**18)** சிதம்பரம் நகராட்சியில் பல்வேறு பணிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள அனைத்து பிரிவு பணியாளர்களின் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் சேர்ந்து இந்நகரமன்ற கட்டிட வளாகத்தின் தென்மேற்கு மூலையில் உபயோகமில்லாத கட்டிடமாக இருந்து வரும் சிப்பந்திகள் சங்க கட்டிடத்தை தங்களது சங்க கூட்டம் மற்றும் நடவடிக்கைகளுக்கு ஏதுவாக தங்களுக்கு வழங்கும்படியும் வழங்கும் பட்சத்தில் அதன் பராமரிப்பு பணியையும் அவர்களே ஏற்றுக்கொள்வதாகவும் கேட்டு விண்ணப்பம் செய்துள்ளனர்.

மேற்படி கட்டிடம் அரசு அனுமதி பெற்று சிப்பந்திகள் சங்க உறுப்பினர்கள் சேர்ந்து அவர்களது பொருட்செலவில் சுமார் 65 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டதாகும்.மேற்படி கட்டிடம் தற்பொழுது எவ்வித உபயோகமும் இன்றியும் பராமரிப்பு இன்றியும் இருந்து வருகிறது. அப்படியே அக்கட்டிடத்தை மேற்படி சங்கத்தினரிடம் ஒப்படைத்தால் கட்டிடமும் பாதுகாப்பாக இருக்கும்.

ஆகையால் சிப்பந்திகளால் அவர்களது பொருட்செலவில் கட்டப்பட்ட கட்டிடத்தை பணியாளர்கள் சங்கத்தின் உபயோகத்திற்கே கேட்பதால் அதனை மேற்படி சங்கத்தின் உறுதிமொழி பெற்று வழங்கலாம்

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 1323 /2023/இ2

**தீர்மானம் எண்.397, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**19)** சிதம்பரம் நகராட்சி மேல ரத வீதி நாளங்காடி (காய்கனி மார்க்கெட்) போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளது. இந்நெரிசல்களை தவிரத்திட வடக்கு மெயின் ரோடு அண்ணா கலையரங்க காலி திறவிடத்தில் கட்டிட பணி 2022 முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. நகர அண்ணா மார்க்கெட் காய்கனி வியாபாரிகள் நலச்சங்கம் சார்பில் மேற்படி இடத்தில் மாற்றி அமைப்பது தேவையற்றது எனவும் தற்போது இயங்கி

வரும் தினசரி நாளங்காடி காய்கறி மார்க்கெட் போதுமானது எனவும் மார்க்கெட் மாற்றப்பட்டால் மார்க்கெட் பின்புறம் தனியார் இடத்தில் கடை வைத்து விற்பவர்கள் பாதிக்கப்படுவாரகள் என்றும், தங்களுடைய வியாபாரம் பாதிக்கப்படும் எனவும், தாங்கள் 71 நபர்களை வெளியேற்றக்கூடாது என WP No.12852/2023 வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் **06.06.2023–ல்** தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கின் தடையுத்தரவு பெறா வண்ணம் வழக்கில் ஆஜராகி வழக்கு அறிவிப்பை பெற்று சென்னை உயர்நீதிமன்ற வழக்றிஞர் **திரு.P. ஸ்ரீனிவாஸ் அவர்கள் ஆஜராகியுள்ளார்.** அவசர அவசியம் கருதி வழக்கினை நடத்திட முன் அனுமதி வழங்கப்பட்டதனை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** 1) WP No.12852/2023 சென்னை உயர்நீதிமன்ற ரிட் மனு வழக்கு நடத்திட மன்றம் அனுமதிக்கலரம்.
2) திரு P. ஸ்ரீனிவாஸ் அவர்கள் எதிர்வாதுரை தாக்கல் செய்து வழக்கினை நடத்திடவும் மற்றும் வழக்காடு கட்டணம் ரூ.18,000/– செலவினத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியம் கருதி வழக்கு நடத்திட முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.398, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

இடம் : சிதம்பரம்
நாள் : 05.07.2023.

(ஓம்)திரு.கே.ஆர்.செந்தில்குமார்,
நகர்மன்றத்தலைவர்,
சிதம்பரம்.

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

ஆணையாளர்,
சிதம்பரம் நகராட்சி.

**<u>சிதம்பரம் நகராட்சி</u>**

**<u>2023-ம் ஆண்டு ஆனி திங்கள் 29-ம் நாள் 14.07.2023 வெள்ளி கிழமை மாலை 04.30 மணியளவில் நடைபெறும் நகர்மன்றஅவசர கூட்டம்</u>**

## மன்றகூட்டப்பொருள்

**1) <u>தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து நகர்மன்ற தலைவர் திருமிகு.K.R.செந்தில்குமார் அவர்கள் முன்மொழிய நகர்மன்ற கொறடா திரு.த.ஜேம்ஸ்விஜயராகவன் அவர்கள் வழிமொழிய கொண்டு வரப்பட்ட தீர்மானம்</u>**

திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான அரசு எப்போதெல்லாம் தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பேற்கிறதோ, அப்போதெல்லாம் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு மதிப்பும் பெருமையும் சேர்க்கப்படுகிறது.

அவ்வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தன்நலம்பாராமல் முழுநேர மக்கள் பணியில் ஈடுபட்டுள்ள நகர்மன்ற தலைவர்களுக்கு ரூபாய் பதினைந்தாயிரம், துணைத் தலைவர்களுக்கு ரூபாய் பத்தாயிரம் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு ரூபாய் ஐந்தாயிரம் என மாதாந்திர மதிப்பூதியம் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

நகர்மன்ற உறுப்பினர்களின் நீண்ட கால கோரிக்கையினை நிறைவேற்றிய தமிழ்த்தாயின் தவப்புதல்வர், திராவிட மாடல் ஆட்சி நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் **மாண்புமிகு.தளபதி.மு.க.ஸ்டாலின்** அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் **மாண்புமிகு.அண்ணன்.கே.என்.நேரு** அவர்களுக்கும், பரிந்துரை செய்த தமிழ்நாடு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் **மாண்புமிகு.அண்ணன்.M.R.K.பன்னீர்செல்வம்** அவர்களுக்கும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

**தீர்மானம் எண்.401, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2)** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் டாக்டர் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் தொடர்பாக அரசு அறிவித்துள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிகள், பூங்கா மற்றும் திருமண மண்டபங்களில் முகாம் நடத்தி விண்ணப்பம் பெற தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும்

விளம்பர பலகை, குடிநீர் நீர் தேக்கத்தொட்டி வாகன ஒலிபெருக்கி மற்றும் துண்டு பிரசுரம் போன்றவைகளை ஏற்பாடு செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது, இதற்கான ரூ.2,00,000/- செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதி வழங்கலாம்
2) மேற்காணும் செலவினத் தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.0352/2020/அ2)

**தீர்மானம் எண்.400, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**3)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் காலியாக உள்ள மகப்பேறு ஆயா பணியிடத்திற்கு நெல்லிக்குப்பம் நகராட்சியில் மகப்பேறு ஆயாவாகப் பணியாற்றும் திருமதி.ஆர்.மகேஸ்வரி என்பவர் குடும்ப சூழ்நிலையின் காரணமாக சிதம்பரம் நகராட்சிக்கு பணிமாறுதல் செய்ய நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.974/2023/எச்1

**தீர்மானம் எண்.401, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**4)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை (நிலை) எண்.98ன் படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு ஜூலை 2023ம் மாதம் முதல் மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்குவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்கண்ட அரசாணையின்படி இந்நகராட்சி நகர்மன்ற தலைவருக்கு ரூ.15000/-மும், நகர்மன்ற துணை தலைவருக்கு ரூ.10000/-மும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு ரூ.5000/- வீதம் மாதந்தோறும் வழங்குவதற்கும், அதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ. அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்

ஆ. பொது நிதியிலிருந்து மாதந்தோறும் வழங்கப்படும் மதிப்பூதியத்திற்கான செலவினத்தினை வழங்கிடவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3088/2021/சி1

**தீர்மானம் எண்.402, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**5)** சிதம்பரம் நகராட்சி பொது சுகாதாரத்தில் பயன்படுத்தப்பட்ட கிருமி நாசினிகள் இருப்பு குறைவாக உள்ளதாக சுகாதார ஆய்வர் குறிப்பில் தெரிவித்துள்ளார். பொது சுகாதாரத்தினை பேணி காத்திடும் பொருட்டு கீழ்க்கண்ட கிருமி நாசினிகள் தேவைப்படுவது இன்றியமையாததாகும். கீழ்காணும் கிருமி நாசினிகள் வாங்குவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. நீர்த்த சுண்ணாம்பு --- 15.00 டன்கள்
2. பிளீச்சிங் பவுடர் --- 10.00 டன்கள்

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3489/2022/எச்1

**தீர்மானம் எண்.403, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**6)** இந்நகராட்சிக்கு சொந்தமான MUDF கடை எண்.13 வரிவிதிப்பு எண்.092/1632, கடைக்கு பெயர் மாற்றம் செய்துதர கோரி திரு.ரமேஷ் என்பவர் பற்று சீட்டு எண்.1603428 நாள்.21.09.2018, ரூ.26244/- செலுத்திய 2018 Deposit Register பதிவேட்டில் பக்கம் எண்.40, 21.09.2018ந் தேதியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.2000/- Other Charges கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்பட்டுள்ளது. எனவே Deposit Register ல் உள்ள தொகை ரூ.26244/-ஐ திரு.ரமேஷ் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.37/2023/அ1

**தீர்மானம் எண்.404, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**7)** மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் சாலையோர வியாபாரிகளின் திட்டத்திளை மேம்படுத்தும் விதமாக குடும்ப உறுப்பினர்கள் கணக்கெடுக்கும் பணிக்கும், அதனை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிக்கும் உத்தரவிட்டுள்ளதை தொடர்ந்து, **PMSVANIDHI Se SAMRIDHI Programe** திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.**9861/2022**/UPA நாள் **19.06.2023**–ம் தேதியிட்ட கடிதத்தில் அனுமதி வழங்கி ரூ.**5,00,000/–** நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது**.** மேற்கண்ட திட்டத்தின்கீழ் கணக்கெடுத்து **PMSVANIDHI Se SAMRIDHI** திட்டத்தில் குடும்ப உறுப்பினர் குறித்து கணக்கெடுப்பு பணி தனியார் நிறுவனம் மூலம் நடைபெற்று வருகிறது**.** கணக்கெடுப்பு கணினியில் பதிவேற்றம் செய்த பின்னர் அதனை மத்திய அரசு திட்டங்களுக்கு கணினி வாயலாக ஒவ்வொன்றாக Apply செய்து திரும்பவும் Sanction செய்வதற்கு தனியார் Data Entry Operator நபர்கள் மூலம் பணி செய்வதற்கு ஆகும் செலவினம் ரூ.**55,000/–**க்கும் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்**.**

**<u>அலுவலகக் குறிப்பு</u>** **1)** மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பட்ட நிதியின் மூலம் சாலையோர வியாபாரிகள் குடும்ப உறுப்பினர்கள் கணக்கெடுப்பு பணி நடைபெற்று வருகிறது**.** கணக்கெடுப்பு கணினியில் பதிவேற்றம் செய்த பின்னர் அதனை மத்திய அரசு திட்டங்களுக்கு கணினி வாயலாக ஒவ்வொன்றாக Apply செய்து திரும்பவும் Sanction செய்வதற்கு தனியார் Data Entry Operator நபர்கள் மூலம் பணி செய்வதற்குரிய செலவினம் ரூ.**55,000/–**க்கும் வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்**.**

**(ந.க.எண்.1139/2021/எப்1)**

**தீர்மானம் எண்.405, அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**இடம் : சிதம்பரம்**
**நாள் : 14.07.2023**

(ஓம்)திரு.கே.ஆர்.செந்தில்குமார்,
நகர்மன்றத்தலைவர்,
சிதம்பரம்.

**//உண்மைநகல் உத்தரவுப்படி//**

ஆணையாளர்,
சிதம்பரம் நகராட்சி.